# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 44/2024 தேதி- 25.02.2026

(P.W.1) . மரியராஜகுமாரி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது இளைய மகளை ராஜாவூர் என்ற கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். என்மீது சில புகார்கள் வந்துள்ளதா என்றால் எதுவும் வரவில்லை. எனது மகள்களுக்கு நியாயமான முறையில் திருமணம் பேசி முடித்து வைத்தோமா என்றால் சரிதான். எனது மகளின் திருமணத்தின்போது கேட்ட பணத்தை என்னால் கொடுக்கமுடியாத நிலையில் இருந்தது என்றால் சரியல்ல. பணம் என்னிடம் இருந்தது என்று நான் கூறுவது பிரதிவாதிக்கு 1 1/2 சென்ட் கொடுத்த சொத்திலிருந்த கிடைத்த பணம்தான் மேற்படி பணம் என்றால் சரியல்ல. நான் தற்போது வியாபரம் செய்து வருகிறேன். எனக்கு கிடைக்கும் வருமானத்தை எனது கணவரின் சிகிச்சைக்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் சரியாக இருக்கும் என்றால் சரியல்ல.

சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திரம் பதிவு செய்யவேண்டுமென்றால் அதற்கு என்ன நடைமுறை என்று எனக்கு தெரியும். அந்த நடைமுறைப்படிதான் இந்த கிரைய பத்திரம் பதியப்பட்டது என்றால் சரியல்ல. நான் அடமானத்திற்கு என்று நினைத்துதான் கையெழுத்திட்டேன். கருங்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்துதான் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. பிரதிவாதியின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்மூலம் எனக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை எல்கை நிர்ணயம் செய்ய வருவாய் அலுவலர் வந்து பார்வையிட்டு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல.

தாசில்தார் பிரதிவாதியின் பெயரில் அனுபவ சான்று கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அனுபவ சான்று கொடுக்க வேண்டுமென்றால் விசாரித்து பின்புதான் கொடுப்பார்கள் என்றால் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. நான் எனது கணவரும் சரியாகத்தான் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் எந்த விபரமும் எனக்கு தெரியாது. நான் நியாயமற்ற முறையில் பொய்யாக ஆதாரம் கிடைக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 2 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டிருப்பது எனக்கு தெரிந்த நபரா என்றால் அந்த நபர்களை எனக்கு தெரியாது. எனது கணவர் சரியாக கிரையம் கொடுத்ததால்தான் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் அவர் 9 வருடமாக படுக்கையில் இருக்கிறார் அதனால் சாட்சி சொல்லவரவில்லை. 9 வருடங்களாக அவருக்கு சுயநினைவு இல்லை. இந்த வழக்கில் உள்ள பிராதில் நான்தான் கையெழுத்திட்டுள்ளேன் எனது கணவர் கையெழுத்திடவில்லை. நியாயமற்ற ஆதாயத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிக்கு நான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.